பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி
சென்னை – 4

03-08-2025 SUNDAY 6.30 PM

<u>மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மத்திய அரசின் வங்கிக்கணக்குத் திட்டத்தின்கீழ், வாடிக்கையாளர்களின் தகவல்களை பதிவு செய்வதற்கான முகாம்கள் நாடு முழுவதும் நடைபெற்று வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பொதுமக்களின் நலனை கருத்தில்கொண்டு, 35 அத்தியாவசிய மருந்துகளின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. தமிழகத்தில் அரசு பேருந்துகள் நவீனமயமாக்கப்பட்டு வருவதாக மாநில அரசு கூறியுள்ளது.

4. நீலகிரி, கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று கனமுதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. **17 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Sitender இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.**

-- இனி விரிவான செய்திகள் --

<<<<<>>>>>

மத்திய அரசின் வங்கிக்கணக்குத் திட்டத்தின்கீழ், வாடிக்கையாளர்களின் தகவல்களை பதிவு செய்வதற்கான முகாம்கள் நாடு முழுவதும் நடைபெற்று வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், கிராம பஞ்சாயத்து அளவில் இந்த முகாம்கள் நடைபெறுவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்காக ரிசர்வ் வங்கி மற்றும் இதர வங்கி அலுவலர்களுக்கு பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்வதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதற்கிடையே, இந்தத் திட்டத்தின்கீழ் பயனடைந்தோர் எண்ணிக்கை 55 கோடியை தாண்டியுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், வாடிக்கையாளர் படிவத்தை பூர்த்தி செய்வதற்காக நாடு முழுவதும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட கிராம பஞ்சாயத்துகளில் நடைபெற்றுவரும் முகாம்களை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>

நாடு முழுவதும் ஆயிரத்து 300 ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டு வருவதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

குஜராத் மாநிலம் பாவ்நகர் ரயில் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் புதிய ரயில் சேவையை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

பயணிகளின் பாதுகாப்பு மற்றும் ரயில் நிலையங்களின் தூய்மைப்பணிகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் 34 ஆயிரம் கிலோமீட்டர் தொலைவிற்கு ரயில் வழித்தடங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ரயில்வேத்துறையில் இதுவரை இல்லாத அளவிற்கு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<>>>>>

தேசிய மருந்து விலை ஆணையம் 35 அத்தியாவசிய மருந்துகளின் விலையை குறைத்துள்ளது.

பொதுமக்களுக்கு குறைந்த செலவில் மருந்துகள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதன்மூலம், தொடர் சிகிச்சையில் உள்ளவர்கள் பயனடைவார்கள் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

தேர்தல் ஆணையத்துக்கு எதிராக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி தெரிவித்து வருவதாக மத்திய சட்ட அமைச்சர் திரு அர்ஜூன் ராம் மெக்வால் குற்றம் சாட்டியுள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை தெரிவிப்பது ஏற்புடையது அல்ல என்று கூறினார்.

இதற்கிடையே, தேர்தல் ஆணையம் அதிகாரத்தை தவறாக பயன்படுத்துவதாக காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு ப சிதம்பரம் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், தேர்தல் ஆணையத்தின் இந்த நடவடிக்கையை காங்கிரஸ் அரசியல் ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் எதிர்கொள்ளும் என்று கூறியுள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் அரசு பேருந்துகள் நவீனமயமாக்கப்பட்டு வருவதாக போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் கூறியுள்ளார்.

பெரம்பலூரிலிருந்து ஐந்து வழித்தடங்களில் பேருந்து சேவையை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

மகளிர் நலனை கருத்தில்கொண்டு அவர்களுக்கான கட்டணமில்லா பேருந்து சேவை தொடங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இது மகளிரிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளதாகவும் திரு சிவசங்கர் கூறினார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் சேலம், கோவை, ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களில் வளர்ச்சிப்பணிகள் நடைபெறவில்லை என்று பிஜேபி மகளிர் அணித்தலைவர் திருமதி வானதி சீனிவாசன் கூறியுள்ளார்.

சுதந்திரப்போராட்ட வீரர் தீரன் சின்னமலை நினைவுதினத்தையொட்டி, சங்ககிரியில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்தியபின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி – அஇஅதிமுக கூட்டணி வெற்றிபெறும் என்றும் திருமதி வானதி சீனிவாசன் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடியால் கடந்த வாரம் திறந்துவைக்கப்பட்ட தூத்துக்குடி விமான நிலையத்தில் இன்று முதல் விமான போக்குவரத்து தொடங்கியது.

இந்த விமான நிலையம் அழகுற வடிவமைக்கப்பட்டுள்ளதாக பயணி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Sound Byte – பயணி – 30 Sec.)*

<<<<<>>>>>

சுதந்திர தினத்தன்று குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெறும் விழாவில் பங்கேற்க திருவண்ணாமலையை சேர்ந்த பள்ளி மாணவிக்கு அழைப்பிதழ் வழங்கப்பட்டது.

இது தமக்கு மகிழ்ச்சியாகவும், பெருமை அளிப்பதாகவும் உள்ளது என்று மாணவி அமிதேஷ்வரி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Voice Byte – அமிதேஷ்வரி – 41 Sec.)*

<<<<<>>>>>

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் இரண்டு நாட்கள் நடைபெற்ற வல்வில் ஓரி விழா இன்று நிறைவடைந்தது.

*ஏராளமான சுற்றுலாப்பயணிகள் இதனை பார்வையிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(Voice Byte – கண்ணன் – 47 Sec. )*

*<<<<<>>>>>*

*நீலகிரி, கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமுதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*( Sound Byte - செந்தாமரை கண்ணன் – 41 Sec. )*

*<<<<<>>>>>*

*மாவட்டச் செய்திகள்*

*பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அரசு இசைப்பள்ளியில் பகுதிநேர கிராமிய கலைபயிற்சி வகுப்பில் சேர 17 வயதுக்கு மேற்பட்டோர் விண்ணப்பிக்குமாறு ஆட்சியர் திரு அருண்ராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.*

---------------

*வேலூர் மாவட்டம் குடியாத்தம் அருகே நாட்டு துப்பாக்கி தயாரித்த நான்கு பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.*

------------------

*கன்னியாகுமரி மாவட்டம் திர்பரப்பு அருவியில் சுற்றுலாப் பயணிகள் இன்று குவிந்துள்ளனர்.*

*<<<<<>>>>>*

*விளையாட்டுச் செய்திகள்*

***17 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Sitender இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.***

கிரீஸின் ஏதென்ஸில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 60 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், கஜகஸ்தானின் *Bekassyl Assambek* -ஐ வென்றார்.

------------

பிரேஸிலில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Manav Thakkar - Manush Shah* இணை வெள்ளிப்பதக்கம் வென்றது.

------------

ஹாங்காங்கில் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Avni Janghu* வெண்கலப்பதக்கம் வென்றார்.

11 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

------------

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியின் தொடக்க சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் *Harsh* வெற்றிபெற்றார்.

பாங்காக்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 60 கிலோ எடைப்பிரிவில் அவர், சீனாவின் *Jiabao Yuan* -ஐ வென்றார்.

-------------

இந்தியாவுக்கு எதிரான ஐந்தாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நான்காம் நாளான இன்று 374 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு இரண்டாவது இன்னிங்சை ஆடிவரும் இங்கிலாந்து சற்றுமுன்வரை 3 விக்கெட் இழப்பிற்கு 183 ரன் எடுத்துள்ளது.

<<<<<END>>>>>